Bodhi International Journal of
Research in Humanities, Arts and Science

Vol. 10 Special Issue 6 March 2026
E-ISSN: 2456-5571

# வெண்டளை நோக்கில் வான்சிறப்பு
# (Ventalai (Prosody) Perspective in Vansirappu)

**Dr. N. Ranjan**
*Assistant Professor, Department of Tamil, Faculty of Science and Humanities*
*SRM University, Kattankulathur*
*ORCID – https://orcid.org/0000-0002-4738-844X.*

Open Access

Manuscript ID:
BIJ-SPL6-MAR26-MD-323

Subject: Tamil

Received : 30.08.2025
Accepted : 14.10.2025
Published : 25.03.2026

DOI: 10.64938/bijsi.v10si6.26.Mar323

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-
ShareAlike 4.0 International License.

**Abstract**
*Thirukkural is a book that holds a unique place in the Tamil literary tradition. It is a wonderful book that speaks of ideas that are common to all people living in the world without any distinction. Ideas from various fields such as scientific ideas, business ideas, economic ideas, philosophical ideas and philosophical ideas have been recorded. This article aims to examine the possible links that may have been included in the chapter called Vansirappu of Thirukkural.*

**Keywords: Iyarcheer Ventalai, Venseer Ventalai, Theama, Pulima, Karuvilam, Koovilam**

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கிய மரபில் தனித்ததோர் இடத்தைப் பெற்றுத் திகழ்கின்ற நூல் திருக்குறள். எந்த ஒரு வேறுபாடும் இல்லாமல் உலகத்தில் வாழக்கூடிய மக்கள் அனைவருக்கும் பொதுவான கருத்துகளைப் பேசுகின்ற அற்புதமான நூலாக இது உள்ளது. அறிவியல் சார்ந்த கருத்துகளும் வணிகம் சார்ந்த கருத்துகளும் பொருளியல் சார்ந்த கருத்துகளும் மெய்யியல் சார்ந்த கருத்துகளும் தத்துவம் சார்ந்த கருத்துகளும் எனப் பல்வேறு துறை சார்ந்த கருத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருக்குறளின் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய தளைகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, தேமா (மாச்சீர்)முன் நிரை, புளிமா (மாச்சீர்) முன் நிரை, கருவிளம் (விளச்சீர்) முன் நேர், கூவிளம் (விளச்சீர்) முன் நேர்.*

**முன்னுரை**
தமிழர்களின் இலக்கிய வளர்ச்சியானது சங்க காலத்திலேயே தொடங்கிவிடுகின்றது. தமிழர்களுடைய யாப்பு மரபினைப்போல உலகில் எந்த மொழியிலும் இப்படியான மரபு காணப்படவில்லை. இலக்கியங்களைக் கொண்டு ஆராய்கையில் ஆசிரியப்பாவில் கிடைக்கத் தொடங்கிய யாப்பானது கலிப்பா, பரிபா என்று மாறி, சங்கம் மருவிய காலத்தில் வெண்பாவாக வளர்ச்சி அடைந்துள்ளதை வரலாற்றின் வழியாக

அறிந்துகொள்ளலாம். திருக்குறளில் தளைகளைப் பொருத்திப் பார்க்கின்ற வகையிலான ஆய்வுகள் வெளிவராத காரணத்தினால் இந்தத் தலைப்புத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வெண்பாவிற்குரிய தளைகளுள் பெரும்பான்மையாக எந்தத் தளை வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தளைகள்**

தளைகள் ஏழு வகைப்படும் என்றாலும் வெண்பாவில் பயன்படுத்தப்படக்கூடிய தளைகள் இரண்டாகும்.

1. இயற்சீர் வெண்டளை
2. வெண்சீர் வெண்டளை

இந்த இரண்டு தலைகளின் அடிப்படையில்தான் வெண்பா யாப்பு எழுதப்பட்டு வருகின்றது. இவை வெண்பாவிற்குரிய செப்பலோசையை மட்டுமே பெற்று வருகின்றன. வேறு அகவலோசையையோ தூங்கலோசையையோ துள்ளலோசையையோ பெற்று வருவதில்லை என்பதை அறியமுடிகின்றது. திருக்குறளிலும் இந்த இரண்டு தளைகளே இடம்பெற்றுள்ளன.

**இயற்சீர் வெண்டளை**

இயற்சீர் என்பது மாச்சீர் மற்றும் விளச்சீர் இரண்டையும் குறிப்பதாகும். அதாவது தேமா, புளிமா ஆகிய சீர்கள் இரண்டும் மா (நேரசை) என்பதில் முடிந்த காரணத்தினால் இவை மாச்சீர் எனப்படுகின்றன.

கருவிளம், கூவிளம் ஆகிய இரண்டு சீர்களும் விளம்(நிரை) என்பதைக் கொண்டு முடிந்துள்ளதால் விளச்சீர் எனப்படுகின்றன. இந்த இரண்டு சீர்களின் கலவையைத்தான் இயற்சீர் வெண்டளை என்று அழைக்கப்படுகின்றது. அதாவது தேமா மற்றும் புளிமா ஆகிய சீர்கள் நிற்க அதனை எடுத்து நிரையசை வந்தாலும் கருவிளம் மற்றும் கூவிளம் ஆகிய சீர்கள் நிற்க அதனை அடுத்து நேரசை வந்தாலும் இயற்சீர் வெண்டளை எனப்படும்.

**தேமா (மாச்சீர்)முன் நிரை**

**புளிமா (மாச்சீர்) முன் நிரை**

**கருவிளம் (விளச்சீர்) முன் நேர்**

**கூவிளம் (விளச்சீர்) முன் நேர்**

இந்த நான்கின் அடிப்படையில் வருவது தான் இயற்சீர் வெண்டளை.

**வெண்சீர் வெண்டளை**

வெண்சீர் வெண்டளை என்பது காய்ச்சீரின் முன் நேர் வருவதைக் குறிக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாச்சீர் மற்றும் விளச்சீருடன் நேரசை சேர்ந்தால் அதற்குக் காய்ச்சீர் என்று பெயர்.

**தேமா+நேர் = தேமாங்காய்**

**புளிமா+நேர் = புளிமாங்காய்**

**கருவிளம்+நேர்= கருவிளங்காய்**

**கூவிளம்+நேர்= கூவிளங்காய்**

இந்த நான்கு சீரின் முன் நேர் வருகின்ற நிலைதான் வெண்சீர் வெண்டளை. வெண்பாவானது இந்த இரண்டு தளைகளைக் கொண்டுதான் நடைபெறும் என்பது முன்னரச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தத் தளைகளின் பதிவு வான்சிறப்பு அதிகாரத்தில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை இனிக் காணலாம்.

**வான்சிறப்பு**

திருக்குறளின் இரண்டாவது அதிகாரமாக இருப்பதுதான் வான்சிறப்பு. ஒவ்வொரு குறளிலும் ஏழு சீர்கள் உள்ளன. ஆனால் அவற்றில் இடம்பெற்றுள்ள தளைகள் ஆறாகும். அதாவது ஓர் அடியில் நான்கு சீர்கள் இருக்கின்ற பொழுது அவற்றின் வழியாக மூன்று தளைகள் கிடைக்கின்றன. முதல் சீரும் இரண்டாம் சீரும் இணைகின்ற போது ஒரு தளையும் இரண்டாம் சீரும் மூன்றாம் சீரும் இணைகின்ற போது ஒரு தளையும் மூன்றாம் சீரும் நான்காம் சீரும் இணைகின்றபோது ஒரு தளையும் என நான்கு சீர்களில் மூன்று தளைகள் இடம்பெறும். இரண்டாம் அடியில் மூன்று சீர் இருக்கின்ற போது, இரண்டாம் அடியின் முதல் சீரையும் இரண்டாம் சீரையும் இணைத்து ஒரு தளை வருவதைக் கணக்கில் கொள்ளும் முன், முதல் அடியின் நான்காம் சீரையும் (இறுதிச் சீரையும்) இரண்டாம் அடியின் முதல் சீரையும் இணைத்து வருகின்ற தளையைக் கணக்கில் கொள்ள வேண்டும். பலருக்கும் நான்கு சீர் கொண்ட அடியின் நான்காவது சீரையும் அடுத்த அடியின் முதல் சீரையும் இணைப்பதன் வழியாகவும் தளை வரும் என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

**வா/னின் றுல/கம் வழங்/கி வரு/தலாற்**

**றா/னமிழ்/த மென்/றுண/ரற் பாற்/று**

இந்தக் குறளின் முதல் சீர் மாச்சீரில் நிற்க வருஞ்சீர் நிரையில் தொடங்கியுள்ளதைக் காணலாம். இவ்வாறு முதலடியின் முதல் மூன்று இடங்களிலும் இயற்சீர்களுள் ஒன்றான மாச்சீருடன் நிரை வந்துள்ளமையாலும் முதலடியின் இறுதிச் சீரில் விளம் நிற்க இரண்டாம் அடியின் முதல் சீரில் நேரசை வந்து விளம் முன் நேரசை வந்துள்ளமையாலும் இக்குறளில்

இயற்சீர் வெண்டளையை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

இந்தக் குறளின் இறுதி இரண்டு இடங்களில் காய் முன் நேரசை வந்துள்ள நிலையைப் பார்க்க முடிகின்றது. அதாவது கூவிளங்காய் முன் நேரசையாக இரண்டு இடங்களிலும் வந்து இறுதியில் காசு என்னும் வாய்பாடைக் கொண்டு முடிந்துள்ளது. முதல் குறட்பாவைக் கொண்டு பார்க்கின்ற பொழுது ஆசிரியர் இயற்சீர் வெண்டளையுள் மாச்சீரைப் பெரும்பான்மையாகப் பயன்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. வெண்சீர் வெண்டளையுள் கூவிளங்காயைப் பயன்படுத்தியுள்ளதையும் அறியமுடிகின்றது.

**இயற்சீர் வெண்டளை**

வான்சிறப்பில் இயற்சீர் வெண்டளைகளுள் மாமுன் நிரையில் 29 தளைகளும் விளம் முன் நேரில் 5 தளைகளும் பதிவுய்செய்யப்பட்டுள்ளன. அவையாவன:

**மா முன் நிரை**

1. வானின் றுலகம், 2. றுலகம் வழங்கி, 3. வழங்கி வருதலாற், 4. தூஉ மழை. 5. பொய்ப்பின் விரிநீர், 6. விரிநீர் வியனுலகத், 7. துண்ணின் றுடற்றும், 8. றுடற்றும் பசி, 9. ஏரி னுழாஅ, 10. னுழாஅ ருழவர், 11. ருழவர் புயலென்னும், 12. வாரி வளங்குன்றிக், 13. றாங்கே யெடுப்பதூஉ, 14. மெல்லா மழை, 15. விசும்பிற் றுளிவீழி, 16. றாங்கே பசும்புற், 17. பசும்புற் றலைகாண், 18. றலைகாண் பரிது, 19. குன்றுந் தடிந்தொழிலி, 20. தாகி விடின், 21. வானம் வறக்குமேல்,, 22. தானந் தவமிரண்டுந், 23. தங்கா வியனுலகம், 24. வானம் வழங்கா, 25. வழங்கா தெனின், 26. நீரின் றமையா , 27. றமையா துலகெனின், 28. வானின் றமையா, 29. றமையா தொழுக்கு.

**விளம் முன் நேர்**

1. வருதலாற் றானமிழ்த, 2. சிறப்பொடு பூசனை, 3. பூசனை செல்லாது, 4. வறக்குமேல் வானோர்க்கு, 5. துலகெனின் யார்யார்க்கும். இயற்சீர் வெண்டளை மொத்தம் 34 தளைகள் வான்சிறப்பில் இடம்பெற்றுள்ளன.

**வெண்சீர் வெண்டளை**

காய்ச்சீரின் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளையாகும். இவ்வெண்டளையில் அதிகமாகத் தேமாங்காய் முன் நேர் வருகின்ற தளைகள் 14 இடத்திலும் புளிமாங்காய் முன் நேர் வருகின்ற இடங்கள் 3 இடத்திலும் கருவிளங்காய் முன் நேர் வருகின்ற இடங்கள் 7 இடத்திலும் கூவிளங்காய் முன் நேர் வருகின்ற இடங்கள் 2 இடத்திலும் என மொத்தம் 26 இடங்களில் வெண்சீர் வெண்டளை பயின்றுவந்த்துள்ளதை அறியமுடிகின்றது. அவையாவன:

**தேமாங்காய் முன் நேர்**

1. துப்பார்க்குத் துப்பாய, 2. துப்பாய துப்பாக்கித், 3. துப்பாக்கித் துப்பார்க்குத், 4. துப்பார்க்குத் துப்பாய, 5. துப்பாய தூஉ, 6. விண்ணின்று பொய்ப்பின், 7. கெட்டார்க்குச் சார்வாய்மற், 8. சார்வாய்மற் றாங்கே, 9. னல்லான்மற் றாங்கே, 10. தன்னீர்மை குன்றுந், 11. தானல்கா தாகி, 12. செல்லாது வானம், 13. வானோர்க்கு மீண்டு, 14. யார்யார்க்கும் வானின்.

**புளிமாங்காய் முன் நேர்**

1. புயலென்னும் வாரி, 2. வளங்குன்றிக் கால், 3. றுளிவீழி னல்லான்மற்.

**கருவிளங்காய் முன் நேர்**

1. வியனுலகத் துண்ணின், 2. கெடுப்பதூஉங் கெட்டார்க்கு, 3. யெடுப்பதூஉ மெல்லா, 4. நெடுங்கடலுந் தன்னீர்மை, 5. தடிந்தெழிலி தானல்கா, 6. தவமிரண்டுந் தங்கா, 7. வியனுலகம் வானம்.

**கூவிளங்காய் முன் நேர்**

1. றானமிழ்த மென்றுணரற், 2. மென்றுணரற் பாற்று. இவற்றைக் கொண்டு பார்க்கின்றபோது வெண்டளையின் பயன்பாட்டினை அறிந்துகொள்ள முடிகின்றது.

**வாய்பாடு**

வான்சிறப்பிலுள்ள பத்துக் குறள்களுள் மலர் என்னும் வாய்பாட்டினைக் கொண்டு ஐந்து குறள்கள் முடிந்துள்ளன. காய் மற்றும் பிறப்பு என்னும் வாய்பாட்டினைத் தலா இரண்டு குறள்களும் நாள் என்னும் வாய்பாட்டினை ஒரு குறளும் பெற்று முடிந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

திருவள்ளுவர் வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் இயற்சீர் வெண்டளையை 34 இடங்களிலும் வெண்சீர்

வெண்டளையை 26 இடங்களிலும் பதிவுசெய்துள்ளார் என்பதை இதன் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளது. நான்கு வகை வாய்பாடுகளுள் மலர் என்னும் வாய்பாடு மிகுதியாக ஐந்து இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறைவாக நாள் என்னும் வாய்பாடு ஓர் இடத்தில் வந்துள்ளது. இத்தகைய அடிப்படையில் திருவள்ளுவரின் யாப்புக்கோட்பாட்டினை முழுவதுமாக ஆராயும்போது, அவரின் யாப்பு நுட்பத்தினை நன்கு தெரிந்து கொள்ள முடியும். அதற்கு இக்கட்டுரை துணையாக அமையும் என்பது திண்ணம்.

**துணைநின்ற நூல்கள்**

1. ஜெ. மோகன் (பதிப்.), திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், சிவாலயம், சென்னை, 2018.
2. இளம்பூரணர் (உரை.), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2013